## DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Summary Trial Case No.803/2022**
**Complainant Side Witness**:1

| | | | |
|---|---|---|---|
| Name | ( PW1) Boopathi | Dated | 13.07.2026 |
| Father's Name | | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of July 2026 by S.Ponraj, Junior Assistant, DM Cum JM Court, Kodumudi1 by following the direction of Officer of this Court.

**(Accused present. Accused counsel appear through Video Conference)**

**எம்.பி.06/2026 மனு தாக்கல் செய்யப்பட்டு 08.05.2026ம் தேதி மனு அனுமதிக்கப்பட்டு மனுவின் பேரில் பு.சா.1 – குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு):–**

நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு விவசாயம் மூலம் வருட வருமானம் எவ்வளவு கிடைக்கும் என்றால் ஆண்டுக்கு ரூ.6,00,000/- முதல் ரூ.7,00,000/- வரை கிடைக்கும். எனது பெயரில் எவ்வளவு விவசாய நிலம் உள்ளது என்றால் 2 ஏக்கர் உள்ளது. எனக்கு ஆண்டிற்கு ரூ.6,00,000/- முதல் ரூ.7,00,000/- வரை வருமானம் கிடைக்கிறது என்பதற்கும் எனது பெயரில் 2 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது என்பதை காட்ட ஆவணம் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி என்ன தொழில் செய்து வருகிறார் என்றால் **EB**யில் வேலை செய்து வருகிறார். எதிரி **EB**யில் என்ன வேலை செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. எதிரி எனக்கு உறவினர் இல்லை என்றால் சரிதான். எதிரி எங்கு வசித்து

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:18:59 +0530

வருகிறார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் நான் பணம் கொடுத்தபோது எதிரி ஈரோடு, சின்னியம்பாளையத்தில் குடியிருந்து வந்தார், தற்போது எங்கு குடியிருக்கிறார் என்று எனக்கு தெரியாது. எதிரி ஈரோடு, சின்னியம்பாளையத்தில் எந்த முகவரியில் குடியிருந்து வந்தார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முகவரியை குறிப்பிட்டு சொல்லமுடியாது ஆனால் சின்னியம்பாளையத்தில் சரஸ்வதி இல்லத்தில் குடியிருந்து வந்தார். மேற்படி எதிரி குடியிருந்த சின்னியம்பாளையம் சரஸ்வதி இல்லத்திற்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.

3. எதிரி எந்த தேதியில், எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்றால் நான் பணம் கொடுத்தற்கு 10 நாட்கள் முன்பாக எனது வீட்டில் வைத்து கேட்டார். எதிரி பணம் கேட்கும் போது என் வீட்டில் யார் யார் இருந்தோம் என்றால் நான் மட்டும் தான் இருந்தேன், எதிரியும் அவருடன் அவரது கணவரும் வந்தார்கள். எவ்வளவு வட்டிக்கு பணம் கொடுத்தேன் என்றால் நான் வட்டிக்கு பணம் கொடுக்கவில்லை. எதிரிக்கும் எனக்கும் இதற்கு முன்பு எந்த வரவுசெலவும் இல்லை என்றால் சரியல்ல, இரண்டு மூன்று முறை வரவு செலவு இருந்தது. மேற்படி வரவு செலவு எந்த தேதியில் எவ்வளவு தொகைக்கு நடந்தது என்றால் தேதி ஞாபகம் இல்லை, ஒரு முறை ரூ.50,000/-மும், மற்றொரு முறை ரூ.20,000/-மும் கொடுத்திருந்தேன்.

4. மேற்படி வரவு செலவுகளை காண்பிப்பதற்கு நான் எவ்வித ஆவணங்களையும்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:19:04 +0530

நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு காசோலை தொகை கொடுக்கும்போது யார் யார் வந்தார்கள், என்ன ஆவணங்கள் என்னிடம் கொடுத்தார்கள் என்றால் எதிரியும், அவரது கணவரும் வந்தார்கள் வழக்கு காசோலை மட்டும் தான் என்னிடம் கொடுத்தார்கள். வழக்கு காசோலையை அவர்கள் வரும்போதே பெயர், தேதி, தொகை மற்றும் கையொப்பம் செய்து கொடுத்தார்கள் என்றால் சரிதான். ரூ.2,00,000/- என்பது பெரிய தொகை என்றால் சரிதான். வழக்கு காசோலை என் முன்னிலையில் எதிரி எழுதவில்லை என்றால் சரியல்ல, சாட்சி தற்போது மாற்றி என் முன்னிலையில் தான் வழக்கு காசோலை எழுதப்பட்டது என்று கூறுகிறார்.

5. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரி வழக்கு காசோலையை என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் பணம் பெற்று வழக்கு காசோலையை கொடுக்காததால் தான் வழக்கு காசோலையை எப்போது நிரப்பினார் என்று முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய கைபேசி எண் 9655024249 ஆகும். மேற்படி கைபேசி எண் என்னுடைய பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். இந்த எண் தவிர வேறு எதாவது கைபேசி எண் பயன்படுத்துகிறேனா என்றால் பயன்படுத்திவருகிறேன் 9488731007 ஆகும். எதிரியின் கைபேசி எண் தெரியுமா என்றால் தெரியாது. எதிரியின் கைபேசி எண்ணிற்கு நான் இதுவரை ஒரு முறை கூட அழைத்ததில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் தொலைபேசி எண்ணை எனது தொலைபேசியில் இருந்து அழைப்பதற்கு எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:19:10 +0530

ஆட்சேபணை உள்ளது. கொடுமுடியில் சபரிமுத்து என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி சபரிமுத்துவின் கைபேசி எண்.9942022228 என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சபரிமுத்து எனக்கு தெரியாத நபர் என்பதால் என்னுடைய கைபேசியில் அவருடைய கைபேசி எண் இருக்க கூடாது என்றால் சரிதான். சபரிமுத்து என்ற நபர் எனக்கு தெரிந்தவரா, இல்லையா என்பதை நிரூபிக்க என்னுடைய கைபேசியில் இருந்து அவரை அழைக்க எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் அடுத்தவர் நெம்பர் தேவையில்லை என்பதால் என்னால் அவரது எண்ணை டைப் செய்ய முடியாது.

6. சபரிமுத்து என்னுடைய நண்பர் என்பதால் அவருடைய கைபேசி எண் எனது கைபேசியில் உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய கைபேசியில் அவருடைய பெயர் போட்டு அவரது கைபேசி எண் பதிவாகியுள்ளதால் தான் நான் அவரது என்னை டைப் செய்ய மறுக்கிறேன் என்றால் சரியல்ல. சபரிமுத்துவிற்கு தான் எதிரியை தெரியும் என்றும், எனக்கு எதிரியை தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. என்னுடைய இரண்டு கைபேசி எண்களும் எந்த கம்பெனியை சேர்ந்தது என்றால் 9488731007 **Jio**, மற்றொன்று 9655024249 **BSNL** ஆகும். என்னுடைய இரண்டு கைபேசியில் இருந்தும் 9942022228 என்ற எண்ணிற்கு சபரிமுத்துவுடன் தொடர்ந்து பேசி வருகிறேன் என்றால் சரியல்ல.

7. மேற்படி என்னுடைய இரண்டு செல்போன் எண்களின் (**Call Logs**) எடுப்பதற்கு எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்றால் சரியல்ல தனிப்பட்ட காரணத்திற்காக ஆட்சேபணை தெரிவிக்கிறேன். என்னுடைய **Call Logs** எடுத்தால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:19:16 +0530

நானும் சபரிமுத்துவும் நண்பர்கள் என்பது தெரிந்து விடும் என்பதால் தான் நான் ஆட்சேபணை தெரிவிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு காசோலையில் எதிரி எந்த மொழியில் கையொப்பம் செய்தார் என்றால் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார். வழக்கு காசோலையில் மற்ற விவரங்களையும் ஆங்கிலத்தில் தான் எழுதியுள்ளார். எதிரி 2020ம் வருடத்தில் சபரிமுத்து என்பவரிடம் வரவு செலவு வைத்த வகையில் கையொப்பம் மட்டும் செய்து மொத்தம் 3 காசோலைகளை பாதுகாப்பிற்காக கொடுத்திருந்தார் என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி 3 காசோலைகளில் ஒன்றை என்னிடம் கொடுத்து துர்லாபம் அடைய வேண்டிய இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, சபரிமுத்து யார் என்றே எனக்கு தெரியாது.

8. வழக்கு காசோலை சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் என்னிடம் கொடுத்து எந்த வித தொகையும் பெறவில்லை என்றால் சரியல்ல. எதிரி **EB**யில் எந்த வேலையில் இருக்கிறார் என்ற விவரம் தெரியாமலேயே நான் கொடுத்ததாக சொல்வதில் இருந்தே எதிரி எனக்கு தெரிந்த நபர் இல்லை என்று தெரிகிறது என்றால் சரியல்ல. வழக்கு காசோலை சட்டப்படியான மறுபயனுக்கு கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. ரூ.2,00,000/- கொடுக்குமளவிற்கு எனக்கு வசதி வாய்ப்புகளும், சொத்துகளும் இல்லை என்றால் சரியல்ல. எனவே இந்த தள்ளுபடியாகத்தக்கது என்றால் சரியல்ல.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:19:21 +0530

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.07.13 17:19:24 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.